**கூடுதல் சார்பு அமர்வு நீதிமன்றம், ஒசூர்**

முன்னிலை திரு. எம். ஜெயமணி, பி,ஏ., பி.எல்.,

கூடுதல் சார்பு அமர்வு நீதிபதி, ஒசூர்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அமர்வு வழக்கு எண்.141/2023**

**CNR.No. TNKI050006452023**

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக : காவல் ஆய்வாளர்,<br>நகர காவல் நிலையம், ஒசூர்<br>குற்ற எண்.686/2016 |
| எதிரி | மோகன் (எ) ஜிம் மோகன் (36/2016),<br>த/பெ. கணேசன்,<br>க.எண்.125, அம்பேத்கர் நகர்,<br>சாமல்பட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம். |
| குற்றம் | சட்டப்பிரிவு 392 உ/இ 397, 506 (ii) of IPC–ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | சட்டப்பிரிவு 392 r/w 397, 506 (ii) of IPC–ன் கீழ் |
| தீர்மானம் | எதிரி இ.த.ச 392 r/w 397, 506 (ii) பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. |
| நீதிமன்றத்தின் தீர்ப்பு | எதிரி இ.த.ச 392 r/w 397, 506 (ii) பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை பிரிவு 235 (1) கு.வி.மு.ச / பிரிவு 258(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

| வ. எண் | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | எதிரியின் பெயர் | தகப்பனார் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | ஒசூர் நகர காவல் நிலையம்,<br>குற்ற எண்.<br>686/2016 | மோகன் (எ) ஜிம் மோகன் | கணேசன் | கூலி | சாமல்பட்டி | 36/2016 |

| சம்பவம் நிகழ்ந்த நாள் | புகார் கொடுத்த நாள் | இறுதி அறிக்கை தாக்கல் நாள் | எதிரி காவல் படுத்தப்பட்ட நாள் | எதிரி பிணையில் சென்ற நாள் |
|---|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 | 12 |
| 08.11.2016 | 08.11.2016 | 17.02.2021 | 08.11.2016 | 14.02.2017 |

| முதல்நிலை விசாரணை நாள் | கு.வி.மு.ச. 228 பிரிவின்கீழ் எதிரி விசாரணை செய்யப்பட் நாள் | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நாள் | விசாரணை முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 13 | 14 | 15 | 16 |
| 11.04.2023 | 05.06.2025 | 12.03.2026 | 12.03.2026 |

| U/s. 355 (1) (b)ன் கீழ் எதிரி விசாரணை செய்யப்பட்ட நாள் | தீர்ப்பு நாள் | தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள் | காலதாமதத்திற்கான விளக்கம் |
|---|---|---|---|
| 17 | 18 | 19 | 20 |
| 13.03.2026 | 13.03.2026 | --- | --- |

| பல்வகை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் உத்தரவு நாள் (மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள்) (கு.வி.மு.ச.317 பிரிவின்கீழான மனுக்களைத் தவிர்த்து | விசாரணையின்போது எதிரி தலைமறைவாகி யிருந்தால், மேற்படி எதிரி ஆஜரான/ஆஜர்ப்படுத்தப் பட்ட விபரங்கள் | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தடை உத்தரவு மற்றும் அதன் முடிவு |
|---|---|---|
| 21 | 22 | 23 |
| **இல்லை** | **இல்லை** | **இல்லை** |

இவ்வழக்கானது இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக இன்று 13.03.2026ம் தேதியன்று வந்தபோது அரசுதரப்பில் வழக்கறிஞர் அரசு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் **திருமதி. S. சௌந்தரி அவர்கள் ஆஜரான நிலையிலும்** எதிரி தரப்பில் வழக்கறிஞர் **திரு. A. சத்தியநாராயணன் அவர்கள் ஆஜரான நிலையிலும்** இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்புரை**

1. கடந்த 08.11.2016ம் தேதி மதியம் 03.30 மணியளவில் ஒசூர் நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஒசூர் கிளை சிறைச்சாலை அருகில் உள்ள ஆட்டோ ஸ்டாண்ட்

அருகில், சாட்சி கோவிந்தராஜ் பானிபூரி கடை வைப்பதற்காக வண்டியை தள்ளிக்கொண்டு போய் நிறுத்தியிருந்தபோது, எதிரி மோகன் (எ) ஜிம் மோகன், சாட்சி கோவிந்தராஜின் அருகில் சென்று "டேய் பாக்கெட்டில் எவ்வளவு பணம் இருக்கிறது மரியாதையா எடுடா" என்று சொல்ல அதற்கு சாட்சி கோவிந்தராஜ் நீ யார், என்னிடம் எதற்கு பணம் கேட்கிறாய் என்று கேட்டதற்கு, எதிரி டேய் என்னையே யாருன்னு கேக்கிறியா, என் பேரைக்கேட்ட சாமல்பட்டி ஏரியாவே நடுங்கும், நான் காசு கேட்டா என்னைப்பார்த்து யாரு, எதுக்குன்னா கேள்வி கேக்கிறியான்னு சொல்லி இடுப்பில் இருந்த கத்தியை எடுத்து பணம் கொடுக்கலைன்னா ஒரே சொருவு சொருவிடுவேன்னு மிரட்டி, சாட்சி கோவிந்தராஜின் சட்டை மேல் பாக்கெட்டில் கையை விட்டு பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.1500/–ஐ பறித்துக்கொண்டதுடன், சத்தம் போடவும் அக்கம் பக்கத்தினர் வரவும் கத்தியை காட்டி "யாராவது என்னை பிடிக்க வந்தால் குத்தி விடுவேன்" என்று கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக எதிரி மீது இ.த.ச.392 உ/இ 397, 506 (ii) பிரிவுகளின்கீழ் ஒசூர் நகர காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி, ஒசூர் நகர காவல் நிலைய, காவல் ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை ஒசூர் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களால் பரிசீலிக்கப்பட்டு, PRC.No.02/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரி ஆஜராக உத்தரவிடப்பட்டு, எதிரி ஆஜரானவுடன், எதிரிக்கு வழக்கு நகல்கள் வழங்கப்பட்டு, வழக்கு விசாரணைக்காக கு.வி.மு.ச.209(அ) பிரிவின்கீழ் கிருஷ்ணகிரி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களால் அமர்வு வழக்கு எண்.141/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் இருதரப்பு வாதுரை களையும் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரி மீது குற்றச்சாட்டு வனைய போதிய முதல் தோற்ற ஆதாரங்கள் இருந்ததால் எதிரி மீது இ.த.ச. 392 உ/இ 397,

506 (ii) பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கிக் கூறப்பட்டபோது, இவ்வழக்கு எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். எதிரி வழக்கு விசாரணையினை எதிர்கொள்ள வேண்டியதால் அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. இந்த வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் கத்தி அ.சா.பொ.1 ஆகவும், பணம் ரூ.1500/– (3 x 500) அ.சா.பொ.2 ஆகவும் அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5. அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்</u>

அ) அ.சா.1 திரு. கோவிந்தராஜ், அவரது நீதிமன்ற முதல் விசாரணையில், தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரியை தனக்கு தெரியாது எனவும், போலீசார் தன்னிடம் ஒரு வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்கள் எனவும், அந்த **கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1** எனவும், இந்த வழக்கு விவரம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்பதாக **பிறழ்சாட்சியாக** சாட்சியம் அளித்துள்ளார்.

ஆ) அ.சா.2 திரு. குருநாதன் தனது நீதிமன்ற முதல் விசாரணையில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது எனவும், இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது எனவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்பதாக **பிறழ்சாட்சியாக** சாட்சியம் அளித்துள்ளார்.

இ) அ.சா.3 திரு. தமிழ்மணி, தனது முதல் விசாரணையில், இந்த வழக்கில் அ.சா.1 யிடம் புகாரை பெற்று வழக்கு பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு. கண்ணன் என்பவருக்காகவும், புலன் வசிரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் திரு. ராஜா சோமசுந்தம் அவர்களுக்காக ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிப்பதாகவும், இதில் காவல் உதவி ஆய்வாளர் திரு. கண்ணன் என்பவர் இறந்துவிட்டதாகவும், இவ்வழக்கில் ப.சா.9 திரு. கண்ணன் அவர்கள் 08.11.2016ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது, அ.சா.1 நிலையம்

ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.686/2016, ச.பி.392, 397, 506(ii) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் எனவும், பின்னர் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை மேல் அதிகாரிக்கு அனுப்பி வைத்தும், அதில் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. ராஜா சோமசுந்தரம் அவரிடம் ஒப்படைத்துள்ளார் எனவும், அந்த **புகார் அ.சா.ஆ,2** எனவும், **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** எனவும், வழக்கு கோப்புகளை பெற்ற காவல் ஆய்வாளர் திரு. ராஜா சோமசுந்தரம் அவர்கள் அன்றையதினமே 08.11.2016ம் தேதி மாலை 05.00 மணியைபோல் சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் 1. மஞ்சுநாத், 2, வெங்கடாசலம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் எனவும், அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** எனவும், பின்னர் மஞ்சுநாத், வெங்கடாசலம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சம்பவ இட சாட்சிகளான அ.சா.1 கோவிந்தராஜ் என்பவரையும், பின்னர் ஹரி கிருஷ்ணன், குருநாதன், ராமசந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் எனவும், பின்னர் இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில், அன்றையதினமே 08.11.2016ம் தேதி இரவு 07.00 மணியைபோல் ஒசூர் பேருந்து நிலையம் திருவண்ணாமலை பஸ் நிற்கும் இடம் அருகே, எதிரியை கைது செய்து விசாரிக்க அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் 1. ராமகிருஷ்ணன், நாராயணன் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார் எனவும், அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான தன்னிடம் வைத்துள்ள கத்தியையும் ரூ.1500/– ஐயும் தங்களிடம் ஒப்படைக்கிறேன் என்ற பகுதி மட்டும் அ.சா.ஆ.6** எனவும், அந்த ஒப்புதல் வாக்குமலத்தின் அடிப்படையில் அவர் ஆஜர் செய்த கத்தியையும், ரூ.1500/–ஐயும் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுல் மகஜரில் கைப்பற்றியுள்ளார் எனவும், அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7** எனவும், பின்னர் சாட்சிகள் ராமகிருஷ்ணா மற்றும் நாராயணப்பா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் எனவும், அதன் பின்னர் எதிரியையும், கைப்பற்றிய பொருட்களையும் நிலையம் கொண்டு வந்து கைப்பற்றிய கத்தி மற்றும் ரூ.1500/–க்கும் படிவம் 91 தயார்

செய்து கைப்பற்றிய பொருட்களையும், எதிரியையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் எனவும், அந்த **படிவம் 91 அ.சா.ஆ.8** எனவும், அந்த **கத்தி அ.சா.பொ.1** ஆகவும், **பணம் ரூ.1500 (3 x 500) அ.சா.பொ.2** எனவும், பின்னர் இவ்வழக்கில் அ.சா.1யிடம் புகாரை பெற்று வழக்கு பதிவு செய்து காவல் உதவி ஆய்வாளர் திரு. கண்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணை முடித்து எதிரி மீது ச.பி.392, 97, 506 (ii) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதாக சாட்சியம் அளித்துள்ளார்.

6. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்குப் பாதகமாக அமைந்துள்ள அம்சங்களைப் பொறுத்து சட்டப்பிரிவு 355 (i) (b) BNSS–ன் கீழ் வினவியபோது அவற்றை எதிரி மறுத்துள்ளார். எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறியதன் அடிப்படையில் எதிரி தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை.

**8. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.**

**9. <u>தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில்:–</u>**

இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**<u>10. தீர்வு</u>**

அரசு தரப்பு வழக்கானது கடந்த 08.11.2016ம் தேதி மதியம் 03.30 மணியளவில், ஒசூர் கிளை சிறைச்சாலை அருகில் உள்ள ஆட்டோ ஸ்டாண்ட் அருகே அ.சா.1 கோவிந்தராஜ் பானிபூரி கடை வைப்பதற்காக தள்ளுவண்டியை நிறுத்தியிருந்தபோது, எதிரி மோகன் (எ) ஜிம் மோகன், அ.சா.1ஐ மிரட்டி, கத்தியை காட்டி அ.சா.1ன் சட்டை பாக்கெட்டில் கையைவிட்டு, அவர் வைத்திருந்த ரூ.1500/–ஐ பறித்துக்கொண்டதால், அ.சா.1 பயத்தில் சத்தம் போடவே அருகே இருந்தவர்கள் வரவும் எதிரி, அ.சா.1யையும்,

அக்கம் பக்கம் இருந்தவர்களையும் கத்தியை காட்டி மிரட்டி தப்பித்து ஓடிவிட்டு குற்றம் புரிந்ததாக எதிரி மீது இதச பிரிவுகள் 392 உ/இ 397, 506 (ii)–ன் பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, ஒசூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்காக மாண்புமிகு கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வழக்கு விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, இந்நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண்.141/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

11. அரசுதரப்பில் அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் கத்தி அ.சா.பொ.1 ஆகவும், பணம் ரூ.1500/– (3x500) அ.சா.பொ.2 ஆகவும் அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் எந்தவொரு சாட்சியமும் முன்னிறுத்தவும் இல்லை, குறியீடு செய்யப்படவும் இல்லை.

12. இவ்வழக்கில் அ.சா.1ம், புகார் கொடுத்தவருமான திரு. கோவிந்தராஜ் கொடுத்த எழுத்துமூலமான புகாரில், தான் கடந்த 08.11.2016ம் தேதி மதியம் 03.30 மணியளவில், ஒசூர் கிளை சிறைச்சாலை அருகில் உள்ள ஆட்டோ ஸ்டாண்ட் அருகே தான் பானிபூரி கடை வைப்பதற்காக தள்ளுவண்டியை நிறுத்தியிருந்தபோது, எதிரி மோகன் (எ) ஜிம் மோகன், தன்னை மிரட்டி, கத்தியை காட்டி தனது சட்டை பாக்கெட்டில் கையைவிட்டு, தான் வைத்திருந்த ரூ.1500/–ஐ பறித்துக்கொள்ளவே தான் பயத்தில் சத்தம் போடவும் அருகே இருந்தவர்கள் வரவே எதிரி, தன்னையும், அக்கம் பக்கம் இருந்தவர்களையும் கத்தியை காட்டி மிரட்டி தப்பித்து ஓடிவிட்டதாக கூறி அ.சா.ஆ.2 ஆன புகாரை கொடுத்துள்ளார்.

13. ஆனால், அ.சா.1 அவரது நீதிமன்ற விசாரணையில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னிடம் ஒரு வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கியதாகவும், அந்த கையெழுத்து மட்டுமே அடையாளபடுத்தி இந்த வழக்கு விவரம்

பற்றி தனக்கு தெரியாது என்று கூறி அவர் கொடுத்த எழுத்துமூலமான புகாரிலிருந்து முற்றிலுமாக மாறுபட்டு கூறி அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் இவ்வழக்கின் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அரசுதரப்பில் முன்னிறுத்தப்பட்ட அ.சா.2 திரு. குருநாதன் என்பவரும், இவ்வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று கூறி அவரும் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

14. (i) மேலும், இவ்வழக்கில் அ.சா.1யிடம் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ப.சா.9 காவல் உதவி ஆய்வாளர் திரு. V.கண்ணன் என்பவருக்காகவும், இவ்வழக்கில் கோப்புகளை பெற்று புலன் விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் திரு. A. ராஜா சோமசுந்தரம் என்பவருக்காகவும், அ.சா.3 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. தமிழ்மணி அவர்கள் ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அவரது நீதிமன்ற விசாரணையில் ப.சா.9 கடந்த 08.11.2016ம் தேதி மாலை 04.00 மணியைபோல் நிலைய பொறுப்பில் இருந்தபோது, அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.2 ஆன புகாரை பெற்று நிலைய குற்ற எண்.686/2016, சட்டப்பிரிவுகள் 392 உ/இ 397, 506 (ii) இதசவின் கீழ் அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக ப.சா.10யிடம் வழக்கின் கோப்புகளை ஒப்படைக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

(ii) பின்னர் வழக்கின் கோப்புகளை பெற்ற ப.சா.10 காவல் ஆய்வாளர் திரு. ராஜா சோமசுந்தரம் அவர்கள் அன்றையதினமே 08.11.2016ம் தேதி மாலை 05.00 மணியைபோல், சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் பா.சா.5 மஞ்சுநாத், ப.சா.6 வெங்கடாசலம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 ஆன பார்வை மகஜர், அ.சா.ஆ.5 ஆன மாதிரி வரைபடம் தயார் செய்து, சம்பவயிட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அன்றையதினமே ஒசூர் பேருந்து நிலையத்தில் வைத்து இரவு 07.00 மணியைபோல் எதிரியை கைது செய்து, அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ப.சா.7 ராமகிருஷ்ணன், ப.சா.8 நாராயணன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து அ.சா.ஆ.6 ஆன ஒப்புதல்

வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியின் அடிப்படையில் எதிரி வைத்திருந்த அ.சா.பொ.1 ஆன கத்தி ஒன்றையும், அ.சா.பொ.2 ஆன ரூ.1500/- (3 x 500)யையும், அ.சா.ஆ.7 ஆன கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி, பின்னர் எதிரியையும், கைப்பற்றிய பொருட்களையும் நிலையம் கொண்டு வந்து, கைப்பற்றிய பொருட்களுக்கு அ.சா.ஆ.8 ஆன படிவம் 91 தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ப.சா.9யை விசாரித்து புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 392 உ/இ 397, 506 (ii) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

16. மேற்கண்டவாறு அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களையும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1, 2 ஆகியவற்றையும் வைத்து பரிசீலிக்கும்போது, இவ்வழக்கில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1யை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், அதேபோல் இவ்வழக்கின் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2ம் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், இவ்வழக்கில் கோப்புகளை பார்வையிட்டு சாட்சியம் அளித்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. தமிழ்மணி என்பவரின் சாட்சியத்தை மட்டும் வைத்து அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் போதுமான சாட்சிய, சான்றாவணங்களுடன் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**17. <u>முடிவாக</u>**

அரசு தரப்பில் எதிரி மீது சட்டப்பிரிவு 392 உ/இ 397, 506 (ii) இதசவின் கீழ் சுமத்தப்பட்ட குற்றசாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து, எதிரி சட்டப்பிரிவு 392 உ/இ 397, 506 (ii) இதசவின் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை பிரிவு 235 (1) கு.வி.மு.ச / பிரிவு 258(1) BNSS ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**18. வழக்கு சொத்துக்கள் பற்றிய உத்தரவு :**

(i) இந்த வழக்கில் கைப்பற்றி தாக்கல் செய்யப்பட்ட CP.No.12/2025, Dt: 14.11.2025 ல் கண்ட வழக்கு சொத்துக்களான அ.சா.பொ.1 ஆன கத்தி ஒன்றை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னரோ, அல்லது மேல் முறையீடு நிலுவையில் இருப்பின் அது முடிந்த பின்னரோ அல்லது மாண்புமிகு மேல் முறையீட்டு நீதிமன்ற உத்தரவு படியோ அழிக்கப்பட வேண்டும் என்று கு.வி.மு.ச. பிரிவு 452 / பிரிவு 498 BNSS ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

(ii) இந்த வழக்கின் மற்றொரு வழக்கு சொத்தான CP.No.12/2025, Dt: 14.11.2025–ல் கண்ட பணம் ரூ.1500/–ம் (500 ரூபாய் நோட்டுகள் மூன்று) வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. (**Challan No.97/2016 as per the office order No.38/2016, Dated : 21.11.2016),** இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னரோ, அல்லது மேல் முறையீடு நிலுவையில் இருப்பின் அது முடிந்த பின்னரோ அல்லது மாண்புமிகு மேல் முறையீட்டு நீதிமன்ற உத்தரவு படியோ அரசுக்கு ஆதாயமாக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு என்னால் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

Jayamani Muthu

Additiional Sub Judge, Additional Sub Court.
Digitally signed by Jayamani Muthu
Location: Hosur

கூடுதல் சார்பு அமர்வு நீதிபதி,
ஒசூர்

அரசுதரப்பு சாட்சிகள் (முதல் நிலை சாட்சியம் மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியம்) :–

| விசாரணை செய்யப்பட்டவர்களின் பெயர் | | முதல் விசாணை செய்யப்பட்ட நாள் | குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| அ.சா.1. | திரு. கோவிந்தராஜ் | 12.03.2026 | 12.03.2026 |
| அ.சா.2. | திரு. குருநாதன் | 12.03.2026 | 12.03.2026 |
| அ.சா.3. | திரு. தமிழ்மணி | 12.03.2026 | 12.03.2026 |

**அரசுதரப்பு சான்றாவணங்கள் :-**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1ன் கையெழுத்து மட்டும் |
| அ.சா.ஆ.2 | புகார் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் |
| அ.சா.ஆ.7 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.8 | படிவம் 91 |

**அரசுதரப்பு சான்றுப் பொருள்கள் C.P.No.12/2025 :-**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | கத்தி ஒன்று |
| அ.சா.பொ.2 | பணம் ரூ.1500/- (3 x 500) |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள் : - இல்லை**

Jayamani Muthu
Additiional Sub Judge, Additional Sub Court.
Digitally signed by Jayamani Muthu
Location: Hosur

கூடுதல் சார்பு அமர்வு நீதிபதி,
ஒசூர்.

**குறிப்பு:-**

1. வழக்கின் விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கு.வி.மு.ச.437(ஏ) பிரிவின்கீழான பிணைப்பத்திரத்தைத் தவிர மற்ற பிணைப்பத்திரங்கள் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பிறகு தானாக ரத்தாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது.
3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
4. மூன்று தினங்களுக்கு மேல் எந்த ஒரு சாட்சியும் விசாரணை செய்யப்படவில்லை.
5. சொத்துப்பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
6. தீர்ப்புரையின் நகல் கூடுதல் அரசு வழக்குரைஞருக்கு வழங்கப்பட்டது.

Jayamani Muthu
Additiional Sub Judge, Additional Sub Court.
Digitally signed by Jayamani Muthu
Location: Hosur

கூடுதல் சார்பு அமர்வு நீதிபதி,
ஒசூர்.